தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் கொசு உற்பத்தி உண்டாகும் கழிவுகள் அகற்றுதல் நிகழ்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் கொசு உற்பத்தியாகும் ஆதாரக் கழிவுகளை அகற்றும் நிகழ்ச்சி 9-11-2014 அன்று நடநத்து. நிகழ்ச்சியை முனைவர் சி. திவாகர் துரைராஜ், முதன்மையர் (பொறியியல்) அவர்கள் துவக்கி வைத்தார். 200 நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

கோவை மாநகராட்சி நகர நல அலுவலர் மருத்துவர் பெ. அருணா, மண்டல அலுவலர் சுகாதார அலுவலர் வார்டு 21, திரு. கே. வி. திருமால், திரு. ஆர். ராதாகிருஷ்ணன், ஆகியோர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஏடிஸ் கொசு உற்பத்தியை தடுக்கும் விதத்தில் பழைய டையர், பாட்டில் மற்றும் நீர் தேங்கக்கூடிய தேங்காய் ஓடு, பிளாஸ்டிக் மற்றும் மண் தொட்டி ஆகியவை விடுதிகள், அலுவலர் மற்றும் பேராசிரியர் குடியிருப்பு பகுதிகளில் அகற்றப்பட்டன. டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டை விடுதிக்காப்பாளர் முனைவர். எம். ஆர். சீனிவாசன், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மு.ரா.லதா மற்றும் ஒருங்கிணைப்பாளர் க.குமுதா ஆகியோர் மேற்கொண்டனர். மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குடியிருப்பு பகுதி, விடுதி, சமையல் கூடம், அலுவலகம் ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கொசு ஒழிக்க மருந்தடிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் சுகாதார அலுவலர் திரு. மு. முருதாச்சலம் மற்றும் துணை விடுதிக்காப்பாளர்கள் முனைவர். மீனா, அமுதா மற்றும் விடுதி இருப்பிடக் காப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்